## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## இரண்டாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2011/2012 (பெப்ரவரி/மார்ச் 2014)

## GEOS 2201 பொருளாதாரப் புவியியல்

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

**பகுதி – I இல் இருந்து இரண்டு வினாக்களை பகுதி – II இல் இருந்து மூன்று வினாவையும் தெரிவுசெய்து எல்லாமாக நான்கு (04) வினாக்களுக்கு விடை தருக.**

**எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்**

---

### பகுதி – I

01. (i) பொருளாதார உலகமயமாதல் என்றால் என்ன?

(03 புள்ளிகள்)

(ii) பொருளாதார உலகமயமாதலின் சாதக பாதக தன்மைகளை சுருக்கமாக விபரிக்குக.

(08 புள்ளிகள்)

(iii) உலகப் பொருளாதார முறைமை (World Economic System) கால ரீதியாக எவ்வாறு மாற்றமடைந்து வருகின்றது என ஆராய்க.

(14 புள்ளிகள்)

02. (i) புதிதாக கைத்தொழில்மயமாக வரும் (NIC) நாடுகளின் பிரதான பண்புகளை குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(ii) கைத்தொழில் புரட்சியானது கைத்தொழில் குறையில் ஏற்படுத்திய மாற்றங்களை சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

(iii) கைத்தொழிலின் அமைவிடத்தினை தீர்மானிக்கும் காரணிகளை உதாரணங்களின் துணைகொண்டு விபரிக்குக.

(13 புள்ளிகள்)

03. பின்வருவனவற்றுள் இரண்டினுக்கு விளக்கக்குறிப்புரை வழங்குக.

(i) பொருளாதாரப் புவியியலின் வளர்ச்சிப்போக்கு

(ii) பிராந்திய அபிவிருத்தியில் போக்குவரத்துத்துறை

(iii) சர்வதேச வர்த்தகமும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும்

(12.5x2=25 புள்ளிகள்)

## பகுதி – II

04. "அதிகரித்துவரும் உலகக் குடித்தொகையானது இயற்கை வளங்கள் மீது பாரிய நெருக்கடியினை ஏற்படுத்தி வருகின்றது." இக்கூற்றினை பொருத்தமான உதாரணங்களின் துணைகொண்டு ஆராய்க.

(25 புள்ளிகள்)

05. நகராக்கச் செயன்முறையினை தூண்டும் காரணிகளை விபரித்து துரித நகராக்கத்தினால் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் எதிர்கொண்டுவரும் சவால்களை உதாரணங்காட்டி விளக்குக.

(25 புள்ளிகள்)

06. இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் விவசாயம் மற்றும் கைத்தொழில் துறைகளின் பங்களிப்பினை கால ரீதியாக ஒப்பிட்டு ஆராய்க.

(25 புள்ளிகள்)